Department of Education, Sabaragamuwa Province/ Weekly School

சப்ரகமுவ மாகாண கல்வித்திணைக்களம்
வாராந்த பாடசாலை

பாடம் : சித்திரம்

வாரம் : ஜனவரி 01

தரம் : 09

தொகுப்பு : செல்வி.S.லுக்ஷனி
இ/நிவி/ஹவுப்பே த.வி

**தேர்ச்சி** : **சுற்றாடல் சார்ந்த கருப்பொருட்களின் கீழ் ஓவியங்கள் வரைவார்.**

**தேர்ச்சி மட்டம்** : **மனித , விலங்கு உருவங்களை இரேகைகளால் வரைவார்.**

**செயற்பாடு** : **"மனித உடல் வடிவமைப்பின் இலயத்தினைக் கற்றறிவோம்"**

**ஒப்படை** : **பின்வரும் அறிவுறுத்தல்களை பின்பற்றுக.**

01. பல்வேறு தொனிப்பொருட்களின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட மனித உருவங்கள் அடங்கிய ஓவியங்கள், காணொலிகள் மற்றும் இணையத்தளங்கள் போன்றவற்றில் பார்வையிடுங்கள். (வேலைத்தளங்கள், விவசாய பூமி, மனித நடமாட்டம் நிறைந்த சூழல்)

02. நீங்கள் பார்வையிட்ட மனித உருவங்களின் செயற்பாடுகள் பல்வேறு மனித உருவங்களின் தன்மைகள், உடல் நிலைகள் என்பவற்றை நன்கு அவதானியுங்கள்.

03. நீங்கள் அவதானித்த பல்வேறு மனித உடல் நிலை உருவங்களையும் வெவ்வேறாக இரேகைகளால் வரைந்துக்கொள்ளுங்கள்.

04 நீங்கள் வரைந்தவற்றைக் கொண்டு உமக்கு விருப்பமான மனித உருவங்கள் கொண்ட சித்திரமொன்றை வரைக. அதில் அளவு பரிமாண இயல்பு தொடர்பாகவும், மனித உணர்வு தொடர்பாகவும் கவனம் செலுத்துக.

05 நீங்கள் வரைந்த சித்திரத்திற்கு ஒளிநிழல் முப்பரிமாண இயல்புகள் வெளிப்படும் வகையில் நிறந்தீட்டுக.